02.12.2024

S.C.No. 21/2024

PW. 8 Tr. டாக்டர்.பிரபாகரன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**</u>

28.08.2023 அன்று மனோஜ் என்ற நபரை நான் முதன் முதலில் தான் பாிசோதித்தேனா என்றால் முதலில் டியூட்டி டாக்டர் பார்த்தார். அதன் பிறகு நான் பார்த்தேன். மனோஜ் எங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரும்போது இறந்திருந்தார் என்பதை அவருடைய இதயத்துடிப்பு மற்றும் நாடித்துடிப்பை பாிசோதனை செய்துதான் முடிவு செய்தேனா என்றால் ஆமாம். மனோஜ் இறந்துவிட்டார் என்ற தகவலை காவல் துறைக்கு எவ்வளவு நேரம் கால தாமதமாக சொன்னேன் என்றால் இரவு 8.50 மணிக்கு இறந்துவிட்டார் என முடிவுக்கு வந்தோம். இரவு 9.30 மணிக்கு போலீசுக்கு தகவல் தொிவித்தோம். அவசர சிகிச்சை பிாிவில் வைத்துதான் அவரை பாிசோதனை செய்தோமா என்றால் தீவிர சிகிச்சை பிாிவில் வைத்து பாிசோதனை செய்தோம். எங்கள் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிாிவு உண்டா என்றால் உண்டு. இறந்துபோன ஒருவரின் உடலுக்கு சிகிச்சை செய்யும் வழக்கம் எங்கள் மருத்துவமனையில் இல்லை என்றால் சரிதான். மனோஜ் கொண்டு வரப்பட்ட போதோ இறந்துவிட்டார் என ஊர்ஜிதம் செய்தபிறகு என்ன காரணத்திற்காக தீவிர சிகிச்சை பிாிவுக்கு கொண்டு போனோம் என்றால் அவ்வாறு

ஊர்ஜிதப்படுத்தியதே தீவிர சிகிச்சை பிரிவில்தான். பொதுவாக நோயாளிகளை சிகிச்சைக்கு கொண்டு வரும்போது அவசர சிகிச்சை பிரிவில் வைத்துதான் சிகிச்சை செய்வது வழக்கம் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனை வழக்கப்படி, மிகவும் கவலைக்கிடமாக உள்ள ஒரு நபரை நேரடியாக தீவிர சிகிச்சை பிரிவிற்குதான் கொண்டு செல்வோம். மனோஜை நான் பரிசோதனை செய்யும்போது அவர் ஆடைகளில் ரத்தம் இருந்ததா என்றால் இருந்தது. மனோஜை எங்கள் மருத்துவமனைக்கு எத்தனை பேர் தூக்கி வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மனோஜை எங்கள் மருத்துவமனைக்கு எந்த வண்டியில் அழைத்து வந்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தீவிர சிகிச்சை பிரிவில் மனோஜை பரிசோதனை செய்யும் போது வேறு நோயாளிகளும் அங்கு இருந்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் இரவு 9.30 மணிக்கு போலீசுக்கு தகவல் கொடுத்த பிறகு, எத்தனை மணிக்கு போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 07.09.2023 க்கு முன்பு எந்த தேதியிலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் இல்லை. தீவிர சிகிச்சை பிரிவில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் அது ஞாபகம் இல்லை. இரவு 8.50 மணிக்கு அவருடைய இறப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு பிறகு 10 நிமிடங்களில் கிளம்பியிருப்பேன். மனோஜின் உடலை எத்தனை மணிக்கு ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் சென்றபிறகு அந்த இறந்துபோனவரின் உடலை ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் பணியை யார் பார்த்துகொண்டார்கள்

என்றால் அப்போது இருந்த நர்ஸ் பார்த்திருப்பார். யார் பார்த்தார்கள் என்று எனக்கு தொியாது. நான் மருத்துவமனையிலிருந்து கிளம்பு வரையில் போலீசார் யாரும் மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் அது எனக்கு தொியாது. போலீசார் யாரும் என்னை பார்க்கவில்லை. நான் குறிப்பிட்டிருக்கும் காயங்கள் தவிர வேறு வெளி காயங்கள் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிாி, மனோஜ் தீவிர சிகிச்சை பிாிவில் வைத்து பாிசோதனை செய்யவில்லை என்றாலும் நான் குறிப்பிட்டுள்ளவாறு அவருக்கு காயங்கள் எதுவும் இல்லை என்றாலும் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.